# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 241/பேரூ/2022**

**நாள்: 07.02.2023**

திரு. R. மயில்சாமி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
வத்தலகுண்டு சிறப்புநிலை பேரூராட்சி. – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 23.11.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.11.2022–ல் பெறப்பட்டு 241/பேரூ/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண் 5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 23.11.2022 நாளிட்ட தனது மனுவில் :

> “மதுரை மாவட்டம், புது விளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, கதவு எண்.5-ல் வசிக்கும் R. மயில்சாமி ஆகிய நான் சமூக ஆர்வலர் மற்றும் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005-ன் ஆர்வலராவேன்.
>
> திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகா, வத்தலகுண்டு பேரூந்து நிலையத்தின் பின்புறத்தில் கதவு எண்.8-ல் இயங்கிவரும் DMS மருத்துவமனை (DMS Hospital) தரைதளம் மற்றும் மூன்று மாடிகளை கொண்ட மருத்துவமனை இதில் பல படுக்கைகள் உள்ளன. இம்மருத்துவமனையில் தினந்தோறும் நூற்றிற்கு மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மேற்படி DMS மருத்துவமனை உரிய அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. கட்டட வரைபட அனுமதியைவிட கூடுதலாக கட்டப்பட்டு உள்ளது. பார்கிங் & வசதி உரிய அளவில் இல்லை. ஆதலால் சாலையின் இருபுறமும் வாகனம் நிறுத்துவதினால் போக்குவரத்திற்கு மிக இடைஞ்சலாக உள்ளது. இது குறித்து புகார் 14.11.2022 தேதியில் வத்தலகுண்டு பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திண்டுக்கள் அவர்களுக்கு

பதிவு தபால் மூலம் புகார் அனுப்பியுள்ளேன். நடவடிக்கை இல்லை. ஆதலால் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தை நாட வேண்டியுள்ளது. மேற்படி DMS மருத்துவமனை பொது மக்கள் பயன்பாட்டு கட்டடம் என்பதால் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு திட்ட இயக்ககத்தின் (Directorate of Town and Country Planning) ஒப்புதல் பெறவில்லை.

மேலும் DMS மருத்துவமனை பொது மக்கள் கூடும் கட்டடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டிடம் (உரிம சட்டம் 1965–ன் பிரிவு 2 (8)ன்படி (Section 2 (8) of the Tamil Nadu Public Buildings (Licensing) Act 1965-ன்படி முறையாக உரிமம் பெறவில்லை. பொது கட்டடம் என்பதால் வருவாய் துறையில் முறையாக அனுமதியும் பெறவில்லை. மேலும் மேற்படி மருத்துவமனையை முறையாக அளவீடு செய்யாமல் சொத்துவரி செலுத்துவதினாலும், இங்கு பணிபுரியும் மருத்துவர்கள், செவிலியர்கள், துப்புரவு பணியாளர்கள் மற்றும் நிர்வாக பணியாளர்களுக்கு உரிய தொழிலாளர் வரி வசூலிக்கத்தவறியதால் வத்தலகுண்டு பேரூராட்சிக்கு பெருத்த வருவாய் இழப்பு ஏற்பட்டுவருகிறது. இழப்பீடுக்கு காரணமான முன்னாள் செயல் அலுவலர் மற்றும் இன்னாள் செயல் அலுவலர்கள் சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்தும் பேரூராட்சி கணக்கில் வரவு வைத்தும் மேற்படி மருத்துவமனையை கண்காணிக்க தவறிய முன்னாள் இன்னாள் வத்தலகுண்டு பேரூராட்சி செயல் அலுவலர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் DMS மருத்துவமனை (DMS Hospital) உரிய துறைகளில் முறையாக அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டு வரும் மருத்துவமனையை அகற்றியும் (Remove) நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-பிரிவுகள் 56 (1) மற்றும் உடன்படிக்கப்பட்ட பிரிவுகள், 85-ன் கீழ் Stop Work Notice/ Notice Calling for approved Plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கபட வேண்டிய Lock and Seal and demolition Notice வழங்கி மற்றும் அமலாக்க நடவடிக்கை எடுக்க உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களை மிகவும் தாழ்மையுடனும், பணிவன்புடனும் வேண்டிக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 02.12.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 23.1.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்ட விவரங்கள் தெரிவித்துள்ளார்.

"திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட காந்திநகர் மெயின்ரோட்டில் அமைந்துள்ள டி.எம்.எஸ். மருத்துவமனை கட்டிடத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது தொடர்பாக திரு. மயில்சாமி என்பவரால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் வழங்கப்பட்ட புகார் மனுவிற்கு கீழ்க்காணுமாறு அறிக்கை பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட காந்திநகர் மெயின்ரோட்டில் அமைந்துள்ள டி.எம்.எஸ். மருத்துவமனை கட்டடத்திற்கு மதுரை நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2329/2013/மம4, நாள்:16.2.2013ன்படி வழங்கப்பட்ட தொழில் நுட்ப அனுமதி எண்.18/2013ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளவாறு உரிய கட்டடம் கட்ட இப்பேரூராட்சியின் கட்டட உரிமம் எண்.63/2013-2014, நாள்:20.12.2013ன் மூலம் உத்தேச கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அனுமதிக்கப்பட்ட வரைபடத்தை விட கூடுதலாக கட்டி வருவதை ஆய்வு செய்து உரிய திருத்திய வரைபட அனுமதி பெற்றுக்கொள்ள தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சம்மந்தப்பட்ட மருத்துவமனை நிர்வாகத்தால் வழங்கப்பட்ட திருத்திய வரைபடம் உரிய அனுமதி வழங்க வேண்டி சென்னை நகர் ஊரமைப்புத்துறை இயக்குநர் அவர்களுக்கு பேரூராட்சி அலுவலக கடிதம் ந.க.எண்.360/2014/அ1, நாள்:23.12.2015ன்படி பரிந்துரை செய்து அனுப்பிவைக்கப்பட்டது.

இந்நிலையில் மருத்துவமனை கட்டடம் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்ட நிலையில் மேற்காணும் கட்டடத்திற்கு வரிவிதிப்பு செய்து தருமாறும், வரிவிதிப்பு செய்யப்பட்ட பின்னர் இயக்குநர் நகர் ஊரமைப்புத்துறை, சென்னை அவர்களால் ஏதேனும், ஆட்சேபனை தெரிவிக்கப்படும்பட்சத்தில் பேரூராட்சி எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் கட்டுப்படுகிறேன் எனவும் தெரிவித்து சம்பந்தப்பட்ட மருத்துவமனை நிர்வாகத்தால் விண்ணப்பிக்கப்பட்டது.

மேலும் சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2068/2016/இ5, நாள்:31.7.2017 மற்றும் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி (Un assessed and Under Assesed) வரிவிதிப்பு செய்யப்படாமல் உள்ள கட்டடங்களை கண்டறியப்பட்டு கணக்கீடு செய்து புதியதாக வரிவிதிப்பு செய்யவும், குறைவான தொகை உள்ள வரிவிதிப்புகளை மறு சீராய்வு செய்து பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு இல்லாமல் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

எனவே பேரூராட்சியின் வருவாயை கருத்தில் கொண்டு உரிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி முறைபடுத்துதல் கட்டணம் 13 அரையாண்டுகளுக்கு தொகை ரூ.557300/- காசோலை எண்.263157, நாள்: 28.03.2018ன்படி வசூலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரப்படி 28.03.2018ம் தேதியில் வரிவிதிப்புகள் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | வரிவிதிப்புதாரர் பெயர் | வரிவிதிப்பு எண். | கதவு எண். | அரையாண்டு சொத்துவரி தொகை |
|---|---|---|---|---|
| 1 | டாக்டர்.சதீஸ்குமார், டாக்டர்.புனிதாமணி | 9253 | 17.13.15 | 15206 |
| 2 | | 9524 | 17.13.15A | 15206 |
| 3 | | 9525 | 17.13.15B | 5286 |
| 4 | | 9526 | 17.13.15C | 22199 |
| 5 | | 9527 | 17.13.15D | 22199 |
| 6 | | 9528 | 17.13.15E | 1662 |

மேற்காணும் வரிவிதிப்புகளுக்கு 2022-2023 நிதியாண்டு வரை நிலுவையின்றி சொத்துவரி வசூல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரத்தினை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மருத்துவமனை கட்டடம் மற்றும் பணியாளர்களுக்கு தொழில்வரி விதிப்பு செய்யப்பட்டு 2021- 2022 நிதியாண்டு வரை தொழில்வரி வசூலிக்கப்பட்டுள்ளது.

எனவே, இதில் வேறு எந்த முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இதில் மனுதாரர் மருத்துவமனை நிர்வாகத்தின் மீது கொண்டுள்ள தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக உண்மைக்கு மாறான பொய்யான புகார்களை அளித்துள்ளார் என்ற விபரத்தினையும் பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

2. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 24.01.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 19.01.2023 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. மனுதாரர் 24.01.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணைக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் ஆஜராக இயலவில்லை எனத் தெரிவித்து தனது 21.01.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்காணும் விவரங்களை தெரிவித்துள்ளார்.

RTI-Act 2005 பிரிவு 6 (1) மனு நாள்: 9.11.2022ல் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு, பொது தகவல் அலுவலர் / மேற்பார்வையாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம். எனக்கு தகவல் வழங்கியுள்ளார்.

கேள்வி 2 – பதிவேடுகளில் விபரம் ஏதும் இல்லை

கேள்வி 3 – பதிவேடுகளில் விபரம் ஏதும் இல்லை

கேள்வி 4 - +2 தளங்களுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டிருந்து, 6,989,38 சதுரடிக்கு மட்டும்.

மேற்கண்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 தகவல் படி, இனம், 2.3-ன்படி எந்த ஒரு திட்ட அனுமதியும் பெறவில்லை. இனம்:4க்கான பதிலில் தரை தளம் மற்றும் இரண்டு மாடிகளுக்கு மட்டும் அனுமதி பெறப்பட்டுள்ளது. சட்டத்திற்கு புறம்பாக கூடுதலாக ஒரு மாடி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

எனவே மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், கூடுதலாக கட்டப்பட்ட கட்டிடங்களை அகற்றவும் (Remove) மூடி முத்திரையிட உத்தரவிடுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

4. திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு பேரூராட்சியின் செயல் அலுவலர் உடல் நலக் குறைவினால் விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவருக்கு பதிலாக தலைமை எழுத்தர் 24.01.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள வத்தலக்குண்டு பேரூராட்சி காந்தி நகர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள டி எம் எஸ் மருத்துவமனை கட்டடத்திற்கு கட்டட வரைபட அனுமதி 20.12.2013 அன்று வழங்கப்பட்டுள்ளது. மேலும் வரைபடத்தை விட கூடுதலாக கட்டப்பட்டுள்ள கட்டடத்திற்கு உரிய அனுமதியை பெறுமாறு 4.1.2018 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதையும், மேலும் மேற்கண்ட மருத்துவமனை கட்டடத்திற்கான கட்டட உரிமை Tamil Nadu Public Building (Licensing) Act 1965) கட்டட உரிமையாளரால் பெறப்பட்டுள்ளதா என்கின்ற விவரம் தெரியவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட மருத்துவமனையில் பணிபுரியும் பணியாளர்களிடமிருந்து 2021–2022 நிதியாண்டு வரை தொழில் வரியும், மேற்கண்ட மருத்துவமனை கட்டடத்திற்கான சொத்து வரி 2022–2023 நிதியாண்டுவரை வசூல் செய்யப்பட்டுள்ளன என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் வத்தலக்குண்டு செயல் அலுவலரின் 23.1.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வத்தலகுண்டு சிறப்புநிலை பேரூராட்சியின் செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் தலைமை எழுத்தரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:

வத்தலகுண்டு சிறப்புநிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ள வத்தலக்குண்டு பேரூராட்சி காந்தி நகர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள டி எம் எஸ் மருத்துவமனை கட்டடத்திற்கு கட்டட உத்தேச வரைபட அனுமதி 20.12.2013 அன்று வழங்கப்பட்டுள்ளது எனவும் மேலும் வரைபடத்தை விட கூடுதலாக கட்டப்பட்டுள்ள கட்டடத்திற்கு உரிய அனுமதியை பெறுமாறு 4.1.2018 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதையும், மேலும் மேற்கண்ட மருத்துவமனை கட்டடத்திற்கான கட்டட உரிமை Tamil Nadu Public Building (Licensing) Act 1965) கட்டட உரிமையாளரால் பெறப்பட்டுள்ளதா என்கின்ற விவரம் தெரியவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

பரிசீலனைக்குப்பின் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:–

இந்நேர்வில் மனுதார் குறிப்பிட்டுள்ள வத்தலகுண்டு பேரூராட்சி, காந்திநகர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள DMS மருத்துவமனை கட்டடத்திற்கு கட்டட அனுமதி 20.12.2013 அன்று வழங்கப்பட்டது; மேலும் வரைபடத்தை விட கூடுதலாக கட்டப்பட்டுள்ள கட்டடத்திற்கு உரிய அனுமதி பெறுமாறு 04.01.2018 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என தெரியவருகிறது. ஆனால் அதன்பிறகு எந்தவிதமான தொடர் நடவடிக்கையும் மேற்கொள்ளாதது வன்மையாக கண்டிக்கத்தக்கது. இது பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் அலுவலர்களின் மெத்தனப்போக்கையும், அலட்சிப்போக்கையும் காட்டுகிறது. இதற்கு பொறுப்பான அனைத்து அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் மேற்படி மருத்துவமனைக்கு வரிவிதிப்பு செய்யப்படாமல் உள்ள கட்டடங்களை கண்டறிந்து கணக்கீடு செய்து புதிதாக வரிவிதிப்பு செய்தும், குறைவான தொகை உள்ள வரிவிதிப்புகளை மறு சீராய்வு செய்தும் பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு இல்லாமல் உள்ளதா என்பதை உறுதி செய்யுமாறு பேரூராட்சியின் செயல் அலுவலருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும் மேற்கண்ட மருத்துவமனை கட்டடத்திற்கான கட்டட உரிமம் (Tamil Nadu Public Building (Licensing) Act 1965)ன்படி உரிமையாளரால் கட்டப்பட்டுள்ளனவா என்பதனை உறுதி செய்திடுமாறு பேரூராட்சியின் செயல் அலுவலருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மருத்துவமனை முறைப்படி பெறப்பட்ட கட்டட அனுமதியின்படி கட்டப்பட்டுள்ளதா என்பதனை ஆய்வு செய்திட பேரூராட்சியின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரியும் உதவி செயற்பொறியாளர் நிலையில் ஒருவரை நியமித்து கட்டட அனுமதி வாங்கப்பட்டதற்கும், கட்டப்பட்டுள்ள கட்டடத்தை ஒப்பீடு செய்தும் மேற்கண்ட மருத்துவமனைக்கான வாகனங்கள் நிறுத்துமிடம் (Parking Space) முறையாக விடப்பட்டுள்ளதா என்பது குறித்ததுமான விரிவான அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு 30 நாட்களுக்குள் அனுப்பிவைக்குமாறும் பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

The Executive Officers who were in office from 04.01.2018 and colluded with the Hospital Management by not pursuing action after issue of notice should be chargesheeted by the Director of Town Panchyats. Unless this trend of complicity

and collusion coupled with prolonged inaction on the part of the Executive Officers is curbed sternly it would lead to still worse consequences in future. This kind of non – accountability, evasion and lack of devotion to duties cannot be tolerated.

A copy of the order is also sent to Government in MAWS for information.

2023-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 07-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி,
   மனை எண்.5, அய்யப்பன் தெரு,
   செம்பருத்தி நகர்,
   புதுவிளாங்குடி, மதுரை – 18.
2. செயல் அலுவலர்,
   வத்தலகுண்டு சிறப்புநிலை பேரூராட்சி,
   வத்தலகுண்டு, திண்டுக்கல் மாவட்டம்.
3. அரசு கூடுதல் தலைமை செயலர்,
   நகராட்சி நிர்வாகம் (ம) குடிநிர் வழங்கல் துறை,
   தலைமைச் செயலகம்,
   சென்னை.
4. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.
5. இணை இயக்குநர்(பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி. நகர்,
   சென்னை–28 (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.